இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர், அப்பகுதியில் மகளிருக்கென புதிதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, எதிர்காலத்தில் இடம் கிடைக்கிறபட்சத்தில், நிதிநிலைமைக்கேற்ப, அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 334, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

334—

காங்கேயம் இன காளைகளைப் பாதுகாத்தல்

***32333—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் இன காளைகளைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காங்கேயம் இன காளைகளைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்கள். காங்கேயம் இன காளைகளைப் பாதுகாக்கும்பொருட்டு, காங்கேயம் பொலிக் காளைகளிலிருந்து விந்துகள் சேகரிக்கப்பட்டு, உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த இன காளைகள் அதிகம் உள்ள கரூர், திண்டுக்கல், திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் காங்கேயம் இன காளை உறைவிந்துக் குச்சிகள்மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த இன காளைகளை வளர்க்கும் விவசாயிகளை ஊக்குவிக்கவும், இவ்வினத்தைப் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், அதன் சிறப்புகளை விளக்கவும்,

2015 செப்டம்பர் 23]

விளம்பரம் மற்றும் கால்நடைக் கண்காட்சிகள், தொழிற்பட்டறைகள் ஆகியவை நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், காங்கேயம் இனங்கள் மட்டுமல்லாமல், உள்நாட்டு மாட்டு இனங்களான பர்கூர், புலிவலம், உம்பளாச்சேரி, தோடா மற்றும் ஆலம்பாடி ஆகியவற்றையும் பாதுகாக்கும் நோக்கத்துடன், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆண்டுதோறும் ரூ.39 இலட்சம் ஒதுக்கீடு செய்து, அதன்மூலமாக 8 கண்காட்சிகள் மற்றும் 5 கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. சிறந்த கால்நடைகளுக்கு அந்தக் கண்காட்சியில் பரிசுகளும் அளித்து ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. இதுவரை காங்கேயம் இனங்களைப் பாதுகாக்கும்பொருட்டு, 2 இலட்சத்து 80 ஆயிரத்து 46 காங்கேயம் இனப் பசுக்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் காங்கேயம், கரூர், கோவை, கூடலூர், சிவபுரி, உடுமலை மற்றும் பெருந்துறை போன்ற பகுதிகளில் காங்கேயம் இன காளைகள் வளர்க்கப்பட்டு வந்தன. இப்போது அப்பகுதியில் மிகக் குறைந்த எண்ணிக்கையில்தான் இவை இருக்கின்றன. அழகும், கம்பீரமும், நோய் எதிர்ப்பு சக்தியும் கொண்டவை இந்த இன காளைகள். வறட்சிக் காலங்களில் குறைந்த உணவை உண்டு, அதிகமான உழைப்புத் திறனை வெளிப்படுத்தக்கூடிய இந்தக் காளைகளைப் பாதுகாப்பது அவசியம். முன்பெல்லாம் இக்காளைகள் உழவிற்கும், கிணற்றிலிருந்து தண்ணீரை இறைப்பதற்கும் மற்றும் பாரம் வண்டியை இழுப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன. இப்போது டிராக்டர், மின் மோட்டார் வசதி ஏற்பட்டதன் காரணமாக, அதனுடைய பயன்பாடு குறைந்து, எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. முன்பெல்லாம் கிராமங்களில் ஒரு வீட்டுக்கு இரண்டு காளைகள் இருந்த நிலை இப்போது மாறிவிட்டது. பெரிய விவசாயிகளின் வீடுகளில் 100 காளைகளுக்குமேல் முன்பு வளர்க்கப்பட்டன. 100 காளைகளுக்குமேல் இந்தக் காங்கேயம்

இன கால்நடைகளை யார் வளர்த்தார்களோ அவர்களுக்கு கிராமத்திலே பெரிய அந்தஸ்து உண்டு என்றிருந்த காலம் மாறிக் கொண்டிருக்கிறது. இப்போதுகூட, ஒரு காளை ரூ.1 இலட்சம் என்று விற்கப்படுகின்றது. ஆகவே, இந்த இன காளைகள் மிகவும் முக்கியமான அம்சம் கொண்ட காளைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், சீக்கிரம் கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: முடித்துவிடுகிறேன். அழிந்துவிடக்கூடிய விலங்குகள் பட்டியலிலே காங்கேயம் இன காளைகளும் எதிர்காலத்தில் சேர்ந்துவிடக் கூடாது என்று அந்தப் பகுதி மக்கள் மிகுந்த அச்சத்தோடு இருக்கின்ற காரணத்தினால், அதற்குத் துரித நடவடிக்கை எடுத்து, அந்த இன காளைகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் இன காளைகள் குறைந்து வருகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அதற்கான பதிலை நான் சொல்லலாம் என்றிருந்தேன். அந்தப் பதிலையும் அவரே சொல்லிவிட்டார். இன்றைக்கு விவசாயிகள், விவசாயம் தொடர்பான பணிகளைச் செய்வதற்கு காளைகளைவிட இயந்திரங்களையே அதிகமாகப் பயன்படுத்துவதன் காரணமாக, காளைகளுடைய எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகின்றது. இருந்தாலும், காங்கேயம் இன காளைகளின் எண்ணிக்கை குறைந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் ஓசூர் கால்நடைப் பண்ணையில் 99 காங்கேயம் கால்நடைகள் பராமரிக்கப்பட்டு, அவற்றின் விந்துகளைக் கொண்டு, உறைவிந்துக் குச்சிகள் தயார் செய்யப்பட்டு, 5 ஆண்டுகளாக முறையே 2012–2013 ஆம் ஆண்டு 1,20,000, 2013–2014 ஆம் ஆண்டு 51,000, 2014–2015 ஆம் ஆண்டு 70,000 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டில் 38,000 காங்கேயம் இனப் பசுக்களுக்கு வருடந்தோறும் தொடர்ந்து செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டு, அந்த இனம் குறையாமல் மாண்புமிகு

அம்மா அவர்களுடைய ஆட்சியில் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. நா. இராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் 6 பொலிக் காளைகள்* (Stud Bull) *வளர்க்கப்படுகின்றன. 100 க்கும் மேற்பட்ட பசுக்கள் சரியான பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. இந்த 6 பொலிக் காளைகளிலிருந்து விந்துகள் சேகரிக்கப்பட்டு, உறைவிந்து வங்கியில்* (Frozen Semen Bank) *பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள காங்கேயம் இன காளைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல்மூலம் இனவிருத்தி செய்வதற்கு இந்த 6 பொலிக் காளைகள் போதுமானதாக இல்லையென்பதால், ஈச்சங்கோட்டை மற்றும் திருநெல்வேலியில் உள்ள கால்நடைப் பண்ணைகளுக்கு இதுபோன்ற பொலிக் காளைகளைக் கொண்டு சென்று, அதன்மூலமாக இனவிருத்தி செய்வதற்கும், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலமாக* Tamil Nadu Livestock Development, *மத்திய அரசின் நிதியுதவியுடன். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. நா. இராமகிருஷ்ணன், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. நா. இராமகிருஷ்ணன்: *இதோ முடித்துவிடுகிறேன். நான் கேட்கும்போதுதான் நீங்கள் சுருக்கமாகக் கேளுங்கள் என்று சொல்கிறீர்கள். சுருக்கமாகத்தான் கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் இப்படி கேட்டால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) சுருக்கமாகக் கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

முற்பகல் 11–10

திரு. நா. இராமகிருஷ்ணன்: *20 துணைக் கேள்விகளைக் கேட்பதற்கு வாய்ப்புக் கொடுக்கிறீர்கள். ஆனால், மூலக் கேள்வியைக் கேட்டவருக்கு வாய்ப்புக் கொடுக்கமாட்டேன் என்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வியைக் கேட்ட உங்களுக்குத்தான் இரண்டாவது கேள்வியைக் கேட்பதற்கு வாய்ப்புத் தந்திருக்கிறேன்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: ஒரு வரியில் கேள்வியை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டாவது கேள்வியைக் கேட்பதற்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன் அல்லவா? கேளுங்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: தற்போது செயல்படுத்திவரும் இத்திட்டம் காங்கேயம் இன காளைகள் அபிவிருத்திக்குப் போதுமானதாக இல்லாததால், மாநில அரசின் நிதியுதவியுடன் இத்திட்டத்தினை விரிவான முறையில் செயலாக்கம் செய்வதற்கு அரசு முன்வருமா என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, காங்கேயம் இன காளைகளின் உற்பத்திக்கான உறைவிந்துக் குச்சிகள் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற கால்நடை மருந்தகங்களில் வைக்கப்பட்டுள்ளன. யாரெல்லாம், காங்கேயம் இன கால்நடைகளை உற்பத்தி செய்ய வேண்டும், பசுக்களுக்கு அந்த ஊசி போட வேண்டுமென்று கேட்கிறார்களோ, அந்தப் பசுக்களுக்கெல்லாம் ஊசி போடப்பட்டு வருகிறது. எனவே, அந்த இனம் குறையும் என்றோ, அழிந்துவிடும் என்றோ நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே நிச்சயமாக அந்த இனம் அதிகமாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சரோஜா அவர்கள்.

திருமதி பெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்தம், நித்தம் நான் வணங்கும் குலதெய்வமே!

2015 செப்டம்பர் 23]

கோமாதா எங்கள் குலமாதா! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழை, எளிய மக்களுக்கு விலையில்லா ஆடு, மாடுகளை வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 100 புதிய கால்நடை கிளை நிலையங்களை அமைக்க ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். எனது தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, சேலம் மாவட்டம், ஏற்காடு தொகுதிக்குட்பட்ட பாப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு புதிதாக 100 கால்நடை கிளை நிலையங்களை அமைக்க ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமானால், 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். அந்த ஊராட்சிக்கும், ஏற்கெனவே கால்நடை கிளை நிலையம் இருக்கின்ற ஊராட்சிக்கும் 3 கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஏற்காடு தொகுதிக்குட்பட்ட பாப்பநாயக்கன்பட்டி கிராமம் அந்த விதிகளுக்குட்பட்டு இருக்குமென்று சொன்னால், அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 335, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*